# முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

அசல் வழக்கு எண். 13 /2021

நாள் : 15.10.2022

வா.சா.1 திரு. சலீம்முல்லா மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

3 இலக்க சொத்துகளில் பாகம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன். முதல் இலக்க சொத்தின் சர்வே எண்.165/10 D. அந்த சொத்து என் தாத்தா நூருதீன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து அதற்குரிய பசலி தாக்கல் செய்துள்ளேன். நூருதீன் எனது தாயாரின் தகப்பனார்.

தாவா முதல் இலக்க சொத்தினை பொறுத்து நூருதீன் தன் மகள் ரசினா பீவிக்கு 05.07.2004 ல் பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மென்ட் ஏற்படுத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். ரசினா பீவி இந்த பிரதிவாதிக்கு அந்த சொத்தை 06.03.2019 தேதியிட்ட உயில் மூலம் கொடுத்து விட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா ஒன்றாம் இலக்க சொத்தில் தார்ஸ் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கான வருவாய் ஆவணங்கள் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று சொன்னால் கடந்த மூன்று வருடங்களாக அவர் பெயரில் உள்ளது. பிரதிவாதி எனது சகோதரி ஆவார். தாவா ஒன்றாம் இலக்க சொத்தில் உள்ள மின் இணைப்பு எனது தாத்தா இப்ராகிம் பெயரில் உள்ளது . இப்ராகிம் எனது தந்தை வழி தாத்தா ஆவார். தாவா ஒன்றாம் இலக்க சொத்தில் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார். நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். தாவா முதல் இலக்க சொத்தில் நான் கூட்டு அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா இரண்டாம் இலக்க சொத்தின் சர்வே எண். 155/3. 2.90 சென்ட் விஸ்தீரணம் உள்ளது. தாவா இரண்டாம் இலக்க சொத்தை பொறுத்து

யுடிஆர் பட்டா அந்தோணி சாமி பெயரில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. தற்பொழுது அது பிரதிவாதி பெயரில் உள்ளது. பட்டா மாறுதல் உத்தரவை நான் பார்க்கவில்லை. தாவா இரண்டாம் இலக்க சொத்தை பிரதிவாதி அந்தோணி சாமியிடமிருந்து வாய்மொழியாக கிரையம் பெற்று அவர் அனுபவத்தில் வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா இரண்டாம் இல்க்க சொத்தை அந்தோணி சாமி எனது பாட்டி ரஹிமா பீவியிடம் இருந்து வாய்மொழி கிரையம் பெற்று பின்னர் அவர் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா 2ம் இலக்க சொத்து பூர்விக சொத்து அதில் நான் அனுபவம் இருந்துள்ளேன். என் தாயார் அந்த சொத்தை அனுபத்திலிரூந்தார் நான் வெளிநாட்டில் இருந்தேன். அந்த சொத்திற்கு எனது தாயார் வரி கட்டியுள்ளார். வரி ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவா 2ம் இலக்க சொத்தை முதலில் எனது பாட்டியும் பின்னர் அந்தோணிசாமியும் அதன் பின்னர் பிரதிவாதியும் அனுபவித்து வருகிறார்கள் என்றும் எனது தாயார் அதில் அனுபவித்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் அனுபவத்தில இருந்திருந்தார் வருவாய் துறை சம்பந்தபட்ட ஆவணங்கள் அவர் பெயரில் இருந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. தாவா 2ம் இலக்க சொத்திற்கு நானும் எனது தாயாரும் பயிர் காப்பீடு செய்து கொள்ளவில்லை. பிரதிவாதி பயிர் காப்பீடு செய்துள்ளார். கடந்த 2, 3 வருடங்களாக அவர் பயிர் காப்பீடு செய்துள்ளார். தாவா 2ம் இலக்க சொத்தில் இருந்து நான் வருமானம் பெற்றுள்ளேன். எனது தாயார் பயிர் செய்து வருமானம் அடைந்தார். நான் பயிர் எதும் செய்யவில்லை காரணம் நான் வெளிநாட்டில் இருந்தேன். 2003 லிருந்து நான் 2019 வரை நான் வெளிநாட்டில் வேலை செய்திருந்தேன். அப்பொழுது அடிக்கடி இந்தியா வந்து சென்றுள்ளேன். எனது பாஸ்போர்ட்டை பார்த்தால் மேற்சொன்ன விவரம் தெரிய வரும என்று சொன்னால் சரிதான். எனது பாஸ்போர்ட் மலேசியாவில் காணாமல் போய்விட்டது. Emergency பாஸ்போர்ட்டில் தான் நான் மலேசியாவில் இருந்து இந்தியா வந்தேன். அது தற்பொழுது என்னிடம் தான் உள்ளது. பாஸ்போர்ட் இல்லாத காரணத்தினால் வேறு

ஆவணங்கள் மூலம் நான் வெளிநாடு சென்ற விவரமும் இந்தியா வந்த விவரமும் நிருபிக்கபடுமா என்றால் வேறு ஆவணங்கள் என்னிடம் இல்லை. பழைய பாஸ்போர்டின் புகைபட நகல் உள்ளதா என்றால் எனது மொபைலில் உள்ளது. மொபைலில் உள்ள விவரத்தை பார்த்தால் மேற்சொன்ன விவரம் தெரிய வரும் என்று சொன்னால் சரிதான். அதை download செய்து நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

தாவா 3ம் இலக்க சொத்தின் சர்வே எண். 165/38. அது 2 3/4 சென்ட் ஆகும். இந்த சொத்தை பொறுத்து இப்ராகிம், சய்பு ரகுமான், உதுமான் அலி, முஸ்தபா ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது. அதில் இப்ராகிம் எனது தாத்தா என்பதால் இந்த சொத்திலும் பாகம் கேட்கிறேன். இந்த 2 ¾ சென்டில் மற்றவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஆனால் தாவா 3ம் இலக்க சொத்து இன்று வரை நான்கு பேரிலும் கூட்டு பட்டாவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான்கு நபர்களும் அவர்களுக்குரிய பாகத்தை பிரித்து கொண்டார்கள் என்று காட்டுவதற்கு ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கூறுவது தவறு என்றும் தாவா 3ம் இலக்க சொத்தில் மேற்குறிப்பிட்ட நான்குபேருக்கும் உரிமை உள்ளது என்றும் அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் 3ம் இலக்க சொத்தை பொறுத்து எனது சகோதரி பெயரில் 31.01.2018 அன்று இனாம் செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்று சொன்னால் எழுதி வைத்துள்ளார் ஆனால் அது சட்டபடி செல்லாது. ஆனால் அது சம்பந்தமான பரிகாரம் கேட்கவில்லை அதற்கு மாறாக பாகம் கேட்டுள்ளேன்.

நான் பிறந்த தேதி 05.09.1981. பிரதிவாதிக்கு 1996 ல் திருமணம் நடந்தது. பிரதிவாதிக்கு திருமணம் நடக்கும்போது எனக்கு 15 வயது இருக்கலாம். அப்பொழுது எனது மாமா மளிகைகடையில் வேலை பார்த்து வந்தேன். நான் வெளிநாட்டிற்கு செல்லும்போது 23 வயது இருக்கலாம். நான் வெளிநாடு சென்று சம்பாதித்து தான் பிரதிவாதிக்கு 1996 ல் திருமணம் செய்து

வைத்தேன் என்று நான் கூறியிருந்தால் அது தவறு ஆனால் நான் உள்ளூரில் இருக்கும்போது வேலை செய்து திருமணத்திற்கு உதவியுள்ளேன். இந்த விவரத்தை நான் பிராதிலோ முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோருக்கு தனிபட்ட வருமானம் இருந்தது. எனது பெற்றோருக்கு தனிபட்ட வருமானம் இருந்ததில்லை என்று நான் கூறியிருந்தால் அது தவறு. எனது தாயார் 2019 ல் காலமானார். அதன் பின்னர் தான் நான் இந்தியாவிற்கு வந்தேன். வெளிநாட்டில் இருந்து சம்பாதித்து எனது பெற்றோருக்கு நான் பணம் அனுப்பியுள்ளேன். எனது முதலாளி ஆட்கள் மூலமாக எனது தாயாருக்கு நான் பணம் கொடுப்பேன் ஆனால் அதற்கு தற்பொழுது என்னிடம் ஆதாரம் இல்லை. எனது முதலாளி எனது அம்மாவிற்கு பணம் கொடுத்ததை போல மீதியை நான் அங்கு சம்பளமாக பெற்று கொள்வேன். முதலாளி ஆட்கள் மூலமாக பணம் இருக்கும் பொழுது 20,000 மோ, 30,000 மோ எனது தாயாருக்கு அனுப்பியுள்ளேன். முதலாளி அவரது தாயார் மூலம் எனது தாயாருக்கு பணம் கொடுப்பார். எனது முதலாளி பெயர் காசிம் அவரது தாயார் பெயர் எனக்கு தெரியவில்லை. ஆனால் அவர் எங்கள் ஊரில் தான் இருக்கிறார். அவரது தாயார் நான் அனுப்பிய பணம் சம்பந்தமாக கணக்கு வைத்திருப்பார் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. எனது தாயாருக்கு 1986 ல் புற்றுநோய் ஏற்பட்டது. அதற்கு நிறைய மருத்துவம் பார்த்தது என்று சொன்னால் சரிதான். எனது தந்தை தான் அந்த செலவுகளை பார்த்து கொண்டார். நான் கூறுவது தவறு என்றும் பிரதிவாதி தான் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக எனது தாயாரின் மருத்துவ செலவுகளை பார்த்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அவர் இறப்பதற்கு இரண்டு வருடத்திற்கு முன்பு எனது தாயாருக்கு சற்று மனநிலை சரியல்லாமல் இருந்தது. நான் அப்பொழுது வெளிநாட்டில் இருந்ததால் வைத்தியம் பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. எனது தாயார் நலமாக தான் இருந்தார் என்றும் அவர் ஒரு பொழுதும் மனநிலையால் பாதிக்கபடவில்லை என்று சொன்னால் அவர் என்னிடம் போனில் பேசுவதை வைத்து அவர் சற்று மனநிலை பாதிப்பு

அடைந்ததாக நான் கூறுகிறேன். நான் எனது பெற்றோருக்கு பணம் அனுப்பாத காரணத்தினாலும் எனது நடவடிக்கை சரியல்லாத காரணத்தினாலும் தான் எனது தாயார் என்னை கண்டித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணமாகி விட்டது. எனது மனைவி பெயர் சரபு நிஷா. அவருக்கு ஏற்கனவே திருமணமாகி விவகாரத்து பெற்றிருந்தார். 2003 ல் விவகாரத்து பெற்றிருந்தார். அதன் பின்னர் அவர்கள் சேர்ந்து வாழவில்லை. குழந்தையை பார்க்க அவ்வ பொழுது வருவார். எனது மனைவிக்கு தேவை என்றால் நான் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவேன். 5 வருடங்களுக்கு முன்பு இருந்து எனது மனைவி பணம் கேட்டால் அனுப்பிவைப்பேன். கடந்த 26.01.2020 ல் எனக்கும் எனது மனைவிக்கும் நாகூர் பள்ளி வாசலில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். அதற்கு முன்பு அவர் எனது மனைவி இல்லை. அவர் பக்கத்து வீட்டிலிருந்தார். பழக்கத்தின் அடிப்படையில் பணம் கேட்பார் நான் அனுப்புவேன். எனது தாயாருக்கு பணம் அனுப்பியதற்கான ஆதாரம் என்னிடம் இல்லை. சரபு நிஷாவின் மகள் பெயர் சபிகா பர்வீன். சபிகா பர்வீனும், அவரது தந்தையும் திருவாடனை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனக்கு எதிராக போக்ஸோ வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான் ஆனால் அது பொய்யான வழக்காகும். ஆரம்பத்திலிருந்தே எனது நடவடிக்கைகள் எதுவும் சரியில்லாத காரணத்தினால் தான் எனது தாயார் பிரதிவாதி பெயரில் தாவா 1 மற்றும் 3 இலக்க சொத்துகளை எழுதினார். தாவா சொத்துகளில் நான் அனுபவத்தில் இல்லை என்று தெரிந்தே எனது மனைவியின் தூண்டுதலில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சொத்துகள் சம்பந்தமா எனக்கும் எனது சகோதரிக்கும் இடையில் ஜமாத்தில் பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை. ஆனால் ஜமாத்தில் நீதிமன்றத்தின் மூலம் சுமூகமாக பிரித்து கொள்ளுமாறு கூறினார்கள். பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தில் பிரதிவாதி குடியிருப்பது சம்பந்தமாக நான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிராக

பிரதிவாதி எஸ்.பி.பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தின் மூலம் நான் பார்த்து கொள்கிறேன் என்று எழுதி கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் அதுவரை பிரதிவாதிக்கு தொல்லை கொடுக்க மாட்டேன் என்று சொன்னால் சரிதான். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலம் நான் எழுதி கொடுத்ததுதான் அது பி.வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துகளில் நான் ஆரம்பத்திலிருந்தே கூட்டு அனுபவத்தில் இருந்தததில்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் இருந்தேன் என்று நான் தாவா தாக்கல் செய்துள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துகளை வேறு பூர்விக சொத்துகள் என்னிடம் இல்லை. எனது தாயாரின் நகைகள், வீட்டு உபயோக பொருட்கள் பிரதிவாதியிடம் உள்ளது. எனது தாயார் எவ்வளவு நகைகள் வைத்திருந்தார் எனக்கு தெரியாது. 20 சவரன் வைத்திருக்கலாம். அந்த நகையின் உரிமையை நான் கோரவில்லை. இந்த விவரத்தை நான் பிராதில் குறிபிடவில்லை என்றால் சரிதான். அனைத்து சொத்துகளையும் சேர்க்காத காரணத்தினாலும் தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும் எனது வழக்கு பாதிப்படைந்தது என்று சொன்னால் சரியல்ல.